**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I - 2018**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி மற்றும் ஹட்டன் தேசிய வங்கி க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 திசெம்பர் 23 ஆந் திகதிய பீபிசீ இலக்கம் (2014) 27 மொத்த இலக்கம் 321 மற்றும் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய பீபிசீ இலக்கம் (2014) 27 மொத்த இலக்கம் 321A(1) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. அம்பாந்தோட்ட சர்வதேச மைய அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிற்கு வீதி வலையமைப்பின் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 103,280 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 804.11 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 87,788 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 683.49 மில்லியன் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 15,492 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 19 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 ஜுலை 18 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதத்தின் மீதான செலுத்த வேண்டிய வட்டி ரூபா 99.41 மில்லியனிற்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இத் தவறினை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 08 இன் பிரகாரம் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நடைமுறை வேலையில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 492.89 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் வேறாக அடயாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கூறிய உருப்படிகளை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உண்மையான நிர்மான கிரயத்தினை காட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வாளரின் கருத்து மற்றும் அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டமானது 26 மாதங்கள் தாமதத்துடன் 2016 சனவரி 19 இல் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றல் 2018 திசெம்பர் 31 இல் அத்திகதியில் அடைய எதிர்பார்க்கப்பட்ட 93 சதவீதத்திற்கு எதிராக 87 சதவீதமாக காணப்பட்டது. ஆலோசகரினால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், காணி சுவீகரிப்பு மற்றும் ஒப்பந்ததாரரினால் விபரமான வடிவமைப்பு வேலைகளின் தயாரிப்பு போன்றவற்றின் தாமதம் காரணமாக அளவைப்பட்டியலின் 21 உருப்படிகள் மீது 0 தொடக்கம் 40 என்ற வீச்சிலான மந்தகதியான செயலாற்றல் அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,283 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 110 வீதிகளின் நிர்மானம் அதிவேகப்பாதையின் நிர்மானம் 2018 திசெம்பர் 31 அல் கூட ஆரம்பிக்கப்படாததன் காரணமாக, அடிப்படை வசதிகளை இழந்த கிராமத்தவர்களிற்காக நிர்மானிக்கப்பட வேண்டியிருந்தது. | செயற்திட்டமானது ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதிலிருந்து 26 மாதங்கள் தாமதத்தடனே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஆரம்பிப்பு திகதி கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதன் பின்னர் நிர்னயிக்கப்படுவதுடன் அதன்படி, செயற்திட்டத்தின் ஆரம்பிப்பு திகதி 2016 சனவரி 19 ஆக நிர்னயிக்கப்பட்டது. | வீதிகளின் மிகுதி புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தெற்கு அதிவேகப்பாதையின் பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 85,530 மில்லியனாகும். ஆனால் அது ரூபா 103,280 மில்லியன் கிரயத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அது ரூபா 113,589 மில்லியனாள மாற்றியமைக்கப்பட்டிருந்தது. மேலும், சாலை வராவதி (Viaduct) மற்றும் பாலங்களின் கிரயம் ரூபா 39,937 மில்லியனிற்கு மதிப்பிடப்பட்டிருந்தது 58,725 மில்லியனாக அதிகரிக்கப்பட்டிருந்தது. | உண்மையான ஒப்பந்த மொத்தம், விபரமான விசாரனைகளில் எதிர்கொள்ளப்பட்ட எதிர்பாரா நிலமைகள், விபரமான வடிவமைப்பில் மேலதிக அளவுகள் அடயாளப்படுத்தப்பட்டமை மற்றும் வேலைத்தள தேவைப்பாடுகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட வேலைகளின் புதிய வேலைப்பரப்பு போன்ற காரணங்களினால் 10 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. | அளவைப்பட்டியல்கள் குறைந்தபட்ச விலகல்களுடன் மாத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 1,406 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 4,790 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. அதில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4,098 காணித்துண்டுகளிற்கு ரூபா 2,636.20 மில்லியன் தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 11.80 மில்லியன் தொகையான வட்டி, இழப்பீடுகளை கொடுப்பதில் தாமதம் காரணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. ஊக்குவிப்பு மற்றும் ஏனைய செலவினங்களிற்கு மேலதிகமாக மொத்தமாக ரூபா 30.7 மில்லியன் 2018 ஆம் ஆண்டின் போது காணி சுவீகரிப்பினை துரிதப்படுத்துவதற்காக ஏற்பட்டிருந்தது. | சில உரிமையாளர்களை மதிப்பீடு செய்வதில் சிக்கல், வேலைகளின் தற்காலிக இடைநிறுத்தம் மற்றும் திரைசேரியிடமிருந்து நிதிகளை வழங்குவதில் தாமதம் போன்ற காரணங்கள் செயற்பாடுகளில் தாமதத்தினை ஏற்படுத்தின. | காணி சுவீகரிப்பு செயன்முறையினை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |